செந்தமிழ்ச் செய்யுள் மாலை.

முதற் பாகம்.

குறிப்புரையுடன் கூடியது.

தஞ்சை,
கரந்தைத் தமிழ்ச் சங்கக் காரியதரிசியும்
ஸெயின்ட் பீட்டர்ஸ் ஹைஸ்கூல்
தலைமைத் தமிழ்ப் பண்டிதருமாகிய
R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள்
தொகுத்தது.

மதுரை, புஸ்தகவியாபாரம்,
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
வெளியிட்டது.

ரிஜிஸ்தர் செய்தது.] 1925. [விலை அணா 5.

Printed at
The Excelsior Press,
Madura.

தமிழ்த் தாய்வாழ்க.

செந்தமிழ்ச் செய்யுள் மாலை.

க. வணக்கப் பகுதி.

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்,
நிலவு லாவிய நீர்மலி வேணியன்,
அலகில் சோதியன், அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். 1.

சேக்கிழார்.

அம்மையே! அப்பா! ஒப்பிலா மணியே!
அன்பினில் விளைந்த ஆரமுதே!
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே! சிவபெரு மானே!
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 2.

உற்றாரை யான்வேண்டேன்,
ஊர்வேண்டேன், பேர்வேண்டேன்,
கற்றாரை யான்வேண்டேன்,
கற்பனவும் இனிஅமையும்

குற்ருலத் தமர்ந்துறையும்
கூத்தா! உன் குரைகழற்கே
கற்ருவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே. 3.

மணிவாசகர்.

நம்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்,
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்,
தன்கடன் அடியேனையுந் தாங்குதல்,
என்கடன்பணி செய்துகிடப்பதே. 4.

பண்ணின் இசையாகி நின்ருய்! போற்றி!
பாவிப்பார் பாவம் அறுப்பாய்! போற்றி!
எண்ணும் எழுத்தும்சொல் ஆனுய் போற்றி!
என்சிந்தை நீங்கா இறைவா! போற்றி!
விண்ணும் நிலனும்தீ ஆனுய்! போற்றி!
மேலவர்க்கு மேலாகி நின்ருய்! போற்றி!
கண்ணின் மணியாகி நின்ருய்! போற்றி!
கயிலை மலேயானே! போற்றி! போற்றி.! 5.

திருநாவுக்கரசர்.

அன்புறு சிந்தையர் ஆகி, அடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமணம் மேவிநின்(று)
இன்புறும் எந்தை இணையடி ஏத்துவார்,
துன்புறு வார்அல்லர், தொண்டுசெய் வாரே. 6.

திருஞானசம்பந்தர்.

பொன்ஞர் மேனியனே!
புலித்தோலே அரைக்கசைத்து
மின்ஞர் செஞ்சடைமேல்
மிளிர் கொன்றை அணிந்தவனே!

மன்னே! மாமணியே!
மழபாடியுள் மாணிக்கமே!
அன்னே! உன்னை அல்லால்
இனியாரை நினைக்கேனே. 7.

சுந்தரர்.

பங்கயக் கண்ணன் என்கோ!
பவளச்செவ் வாயன் என்கோ!
அங்கதிர் அடியன் என்கோ!
அஞ்சன வண்ணன் என்கோ!
செங்கதிர் முடியன் என்கோ!
திருமறு மார்வன் என்கோ!
சங்குசக் கரத்தன் என்கோ!
சாதிமா ணிக்கத் தையே. 8.

ஒளிர்மணி வண்ணன் என்கோ!
ஒருவன்என் றேத்த நின்ற
நளிர்மதிச் சடையன் என்கோ!
நான்முகக் கடவுள் என்கோ!
அளிமகிழ்ந் துலகை மெல்லாம்
படைத்தவை ஏத்த நின்ற
களிமலர்த் துளவன் எம்மான்
கண்ணனை மாய னையே. 9.

சடகோபர்.

வைகலந்த மூவிலைவேல் ஈசற்கும்,
வாசவற்கும், வாசப் பூமேல்
மெய்கலந்த நால்வேத விரிஞ்சனுக்கும்
மேலாய்வீற் றிருப்பர் மாதோ!

பைகலந்த பாம்பணைமேல் திருவரங்கப்
பெருநகருள் பள்ளி கொள்ளும்
கைகலந்த நேமியான் திருநாமத்(து)
ஒருநாமம் கற்றார் தாமே. 10.

பாதியாய் அழுகியகால் கைய ரேனும்,
பழிதொழிலும் இழிகுலமும் படைத்தா ரேனும்,
ஆதியாய்! அரவணையாய்! என்பர் ஆகில்
அவர்அன்றோ யாம்வணங்கும் அடிகள் ஆவர்!
சாதியால் ஒழுக்கத்தால் மிக்கோ ரேனும்
சதுர்மறையால் வேள்வியால் தக்கோ ரேனும்
போதில்நான் முகன்பணியப் பள்ளி கொள்வான்
பொன்அரங்கம் போற்றாதார் புலையர் தாமே. 11.

பிள்ளைப்பெருமாள் அய்யங்கார்.

நம்பிஉன தருள்வேட்டு
நடுக்கடலுள் கலம்கவிழ்த்து
வெம்புதுயர் மனத்தார்போல்
மெலிகின்றேன் நெடுநாளாக்
கும்பமுனிக் கருள்புரியும்
கொற்றவனே! முகலிங்கா!
தும்பைமுடித் தோய்!புரக்க
இரக்கம் இன்னம் தோன்றாதோ! 12.

உண்டென மறைகள்ஓதும்
ஒருதனி முதலே! நாளும்
அண்டரும் முனிவர் தாமும் காண்கிலர்,
அடியேன் உன்னைத்.

தெண்டிரை வளாகம் முற்றும்
  தேடினேன் தேடித் தேடிக்
கண்டனன், கலாவின் நீழல்!
  கருவைமா நகரத் தானே. 13.

அதிவீர ராம பாண்டியன்.

இன்பப் பெருக்கே! அருட்கடலே!
  இறையே! அழியா இரும்பொருளே!
அன்பர்க் கருளும் பெருங்கருணை
  அரசே! உணர்வால் ஆம் பயனே!
வன்பர்க் கரிதாம் பரஞ்சோதி
  வடிவே! வடிவேல் மணியே என்!
துன்பத் திடரைப் பொடியாக்கிச்
  சுகம்தந் தருளத் துணியாயே! 14.

விண்ணுறு சுடரே! என்னுள்
  விளங்கிய விளக்கே! போற்றி!
கண்ணுறு மணியே! என்னைக்
  கலந்தநற் களிப்பே! போற்றி!
பண்ணுறு பயனே! என்னைப்
  பணிவித்த மணியே! போற்றி!
எண்ணுறும் அடியார் தங்கட்
  கினியதெள் ளமுதே! போற்றி! 15.

இராமலிங்க சுவாமிகள்.

16. பத்தியால் கனிந்து பாடிடும் அடியார்
  பண்புறப் பாலிக்கும் வள்ளால்!
அத்தியின் உரியாய்! அருந்தமிழ் முதல்வா!
  அன்பினில் விளைந்திடும் அமுதே!

சத்திய நெறியே! சற்குண முதலே!
சந்ததம் நினதடி வழுத்தும்
உத்தம நெறியை உவந்தெனக் களிப்பாய்!
உமையொரு பாகமார் ஒளியே! 16.

சிதம்பரன்.

உ. தமிழ்ப்பகுதி.

வானார்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே!
மன்னியமூ வேந்தர்கள்தம் மடிவளர்ந்த மகளே!
தேனார்ந்த தீஞ்சுனைசால் திருமாலின் குன்றம்
தென்குமரி ஆயிடைநற் செங்கோல்கொள் செல்வி!
கானார்ந்த தேனே! கற் கண்டே! நற் கனியே!
கண்ணே! கண் மணியே! அக் கட்புலஞ்சேர் தேவி!
ஆனாத நூற்கடலை அளித்தருளும் அமிழ்தே!
அம்மே! நின் சீர்முழுதும் அறைதல்யார்க் கெளிதே!

R. வேங்கடாசலம் பிள்ளை.

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இயம்பிய திம்மொழியே - அதன்
முந்துபல் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தோர்
மொழிந்ததும் இம்மொழியே - அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இம்மொழியே - இதை
வந்தனை கூறி மனதில் இருத்தியென்
வாயுற வாழ்த்தேனோ! - இதைச்
செந்தமிழ் வாழிய! செந்தமிழ் வாழிய!
என்று செபியேனோ! 2.

இன்னுயிர் தந்தெமை யீன்று வளர்த்தருள்
ஈந்ததும் இம்மொழியே - எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்ததும் இம்மொழியே - அவர்
கன்னியர் ஆகி நிலவினில் ஆடிக்
கழறிய திம்மொழியே - தங்கள்
பொன்னுடல் மேவப் புதுப்புனல் ஆடிப்
புகன்றதும் இம்மொழியே - இதைச்
செந்தமிழ் வாழிய! செந்தமிழ் வாழிய!
என்று செபியேனோ! 3.

பண்டிதர் அ. கந்தசாமிப் பிள்ளை.

யாம்அறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்!
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழர்எனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ! சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும். 4.

யாம்அறிந்த புலவரிலே கம்பனைப் போல்,
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை,
உண்மை! வெறும் புகழ்ச்சி இல்லை!
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒருசொற் கேளீர்!
சேமம்உற வேண்டும்எனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்! 5.

சி. சுப்பிரமணிய பாரதியார்.

௯. நாட்டுப் பகுதி.

காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்
கண்டதோர் வையை பொருனைநதி - என
மேவிய யாறு பலவோடத் திரு
மேனி செழித்த தமிழ் நாடு. 1.

முத்தமிழ் மாமுனி நீள்வரையே - நின்று
மொய்ம்புறக் காக்குந் தமிழ்நாடு - செல்வம்
எத்தனை உண்டு ! புவிமீதே அவை
யாவும் படைத்த தமிழ் நாடு. 2.

கல்வி சிறந்த தமிழ் நாடு - புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ் நாடு - நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசும் தமிழ் நாடு. 3.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரம் என்றோர் - மணி
ஆரம் படைத்த தமிழ் நாடு. 4.

சிங்களம் புட்பகம் சாவகம் ஆதிய
தீவுபலவினும் சென்றேறி - அங்குத்
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் - நின்று
சால்புறக் கண்டவர் தமிழ் நாடு. 5.

சி. சுப்பிரமணிய பாரதியார்.

உலகிற் சிறந்தொளிர்வதெங்கள் நாடே - பல
உண்மைகள் தோன்றிய தெங்கள் நாடே - மிகு
தத்துவக் கலைஉள தெங்கள் நாடே - நல்ல
தாபதர் வாழ்ந்ததும் எங்கள் நாடே. 6.

செந்தமிழ் வளர்வதும் எங்கள் நாடே - வெகு
சிவத்தலம் மன்னுவ தெங்கள் நாடே - பல
வைணவத் தலம்உள தெங்கள் நாடே - உயர்
வானவர் போற்றுவ தெங்கள் நாடே. 7.

பங்கயத் தடம்உள தெங்கள் நாடே - தமிழ்ச்
சங்கம் இருந்ததும் எங்கள் நாடே - செழும்
கங்கை பரவுவ தெங்கள் நாடே - திருக்
காவிரி சூழுவ தெங்கள் நாடே. 8.

சேரர்கள் ஆண்டதும் எங்கள் நாடே - நலச்
சோழர்கள் ஆண்டதும் எங்கள் நாடே - வளம்
காண்டற் கினியதும் எங்கள் நாடே - தமிழ்ப்
பாண்டியர் வாழ்ந்ததும் எங்கள் நாடே. 9.

வாணிகம் வளர்ந்ததும் எங்கள் நாடே - திரு
வள்ளுவர் பிறந்ததும் எங்கள் நாடே - வெகு
கப்பல்கள் கட்டிய தெங்கள் நாடே - நீதிக்
காவியம் நிறைந்துள தெங்கள் நாடே. 10.

கைத்தொழில் கண்டதும் எங்கள் நாடே - கொடைக்
காவலர் வாழ்ந்ததும் எங்கள் நாடே - அரும்
சிற்பம் சிறந்ததும் எங்கள் நாடே - தரும்
கற்பகத் தருவென்ப தெங்கள் நாடே. 11.

பைம்பொன் விளைவதும் எங்கள் நாடே - அருள்
கம்பன் பிறந்ததும் எங்கள் நாடே - திரு
அருட்கிடம் ஆவதும் எங்கள் நாடே - பெரும்
அடியவர் வாழ்ந்ததும் எங்கள் நாடே. 12.

சித்தர்கள் உதித்ததும் எங்கள் நாடே - மிகச்
சிறந்த மருந்துள தெங்கள் நாடே - செழும்

நெசவுத் தொழில்உடைத் தெங்கள் நாடே - நல்ல
நேசம் விளைப்பதும் எங்கள் நாடே. 13

உண்ணும் பொருள்உடைத் தெங்கள் நாடே - அறக்
கண்ணகி தோன்றிய தெங்கள் நாடே - அருள்
அவ்வை உறைந்ததும் எங்கள் நாடே - வெகு
அரசர் விரும்புவ தெங்கள் நாடே. 14.

சிதம்பரன்.

---

௨. நீதிப்பகுதி.

நன்னெறி.

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிதென்க—ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ, நன்னுதால்! ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு.? 1.

நீக்கம் அறும்இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும்--பூக்குழலாய்!
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம். 2.

கடலே அனையம்யாம் கல்வியால் என்னும்
அடலே றனையசெருக் காழ்த்தி—விடலே
முனிக்கரசு கையால் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும். 3.

தம்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெம்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகில்
நிறையிருளை நீக்குமேல் நின்று. 4.

தொலையாப் பெரும்செல்வத் தோற்றத்தோம் என்று
தலையா யவர்செருக்குச் சார்தல்—இலையால்
இரைக்கும்வண் டூதுமலர் ஈர்ங்கோதாய்! மேரு
வரைக்கும்வந் தன்று வளைவு. 5.

எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ?—பைந்தொடீஇ!
நின்று பயன்உதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி. 6.

ஆக்கும் அறிவான் அலது பிறப்பினால்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க—நீக்கு
பவரார்? அரவின் பருமணிகண் டென்றும்
கவரார் கடலின் கடு. 7.

உண்டு குணமிங் கொருவர்க் கெனினும்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்பும் செழும்பொழில்வாய் வேம்பன்றோ
காக்கை விரும்பும் கனி. 8.

கொள்ளும் கொடும்கூற்றம் கொல்வான்குறுகுதல்முன்
உள்ளம் கனிந்தறஞ்செய் துய்கவே—வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கண் என்செய்வார் பேசு. 9.

நல்லார் செயும்கேண்மை நாடோறும் நன்றாகும்
அல்லார் செயும் கேண்மை ஆகாதே—நல்லாய்! கேள்
காய்முற்றில் தின்தீங் கனியாம் இளந்தளிர்நாள்
போய்முற்றின் என்னாகிப் போம். 10.

சிவப்பிரகாசர்.

நீதி நெறிவிளக்கம்.

அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை. 1.

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும் கல்லார்
அவையஞ்சா ஆகுலச் சொல்லும்—நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமும் நல்கூர்ந்தார் இன்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று. 2.

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா! பெரிதென் றகமகிழ்க—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றவெலாம்
எற்றே இவர்க்குநாம் என்று. 3.

கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறாஉம்
குற்றம் தமதே பிறிதன்று—முற்றுணர்ந்தும்
தாம்அவர் தன்மை உணராதார் தம்முணரா
ஏதிலரை நோவ தெவன்? 4.

நட்புப் பிரித்தல் பகைநட்டல் ஒற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையும் ஐயுறுதல்—தக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டும் குறி. 5.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். 6.

நல்லா ரொழுக்கின் தலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார்—பல்பொறிய
செங்கட் புலியே (று) அறப்பசித்தும் தின்னுவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ்.

வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போலும் நனிநல்ல—கொன்னே
அருளிலன் அன்பிலன் கண்ணறையன் என்று
பலரால் இகழப் படான். 8.

குமரகுருபரர்.

நான்மணிக்கடிகை.

கள்ளி வயிற்றில் அகில்பிறக்கும்; மான்வயிற்றில்
ஒள்ளரி தாரம் பிறக்கும்.—பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும்; அறிவார்யார்!
நல்லாள் பிறக்கும் குடி. 1.

கற்றார்முன் தோன்றா கழிவிரக்கம்; காதலித்தொன் (று)
உற்றார்முன் தோன்றா உறாமுதல்—தெற்றென
அல்ல புரிந்தார்க் கறந்தோன்றா; எல்லாம்
வெகுண்டார்முன் தோன்றா கெடும். 2.

இன்னாமை வேண்டின் இரவெழுக; இந்நிலத்தில்
மன்னுதல் வேண்டின் இசைநடுக—தன்னொடு
செல்வது வேண்டின் அறம்செய்க; வெல்வது
வேண்டின் வெகுளி விடல். 3.

கோல்நோக்கி வாழும் குடியெல்லாம்; தாய்தரும்
பால்நோக்கி வாழும் குழவிகள்—வானத்
துளிநோக்கி வாழும் உலகம்; உலகின்
விளிநோக்கி இன்புறூஉம் கூற்று. 4.

கரப்பவர்க்குச் செல்சார் கவிழ்தல்; எஞ்ஞான்றும்
இரப்பவர்க்குச் செல்சார்ஒன் றீவோர்—பரப்பமைந்த
தானைக்குச் செல்சார் தறுகண்மை; ஊன்உண்டல்
செய்யாமை செல்சார் உயிர்க்கு. 5.

மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையும்
தவமிலார் இல்வழி இல்லை—தவமும்
அரசியல் இல்வழி இல்லை; அரசியலும்
இல்வாழ்வார் இல்வழி இல். 6.

நல்லார்க்கும் தம்மூரென் றூரில்லை; நன்னெறிச்
செல்வார்க்குந் தம்மூரென் றூரில்லை—அல்லாக்
கடைகட்கும் தம்மூரென் றூரில்லை; தங்கைத்
துடையார்க்கும் எவ்வூரும் ஊர். 7.

விளம்பி நாகனார்.

திரிகடுகம்.

கணக்காயர் இல்லாத ஊரும், பிணக்கறுக்கும்
மூத்தோரை இல்லா அவைக்களனும்--பாத்துண்ணும்
தன்மையி லாளர் அயலிருப்பும் இம்மூன்றும்
நன்மை பயத்தல் இல. 1.

தன்னை வியந்து தருக்கலும், தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்—முன்னிய
பல்பொருள் வெஃகும் சிறுமையும்இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை. 2.

கிளைஞர்க் குதவாதான் செல்வமும், பைங்கூழ்
விளைவின்கண் போற்றான் உழவும்—இளையனைக்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையும்இம்மூன்றும்
உள்ளன போலக் கெடும். 3.

நிறைநெஞ் சுடையானை நல்குர வஞ்சும்,
அறனை நினைப்பானை அல்பொருள் அஞ்சும்,
மறவனை எவ்வுயிரும் அஞ்சும்இம் மூன்றும்
திறவதில் தீர்ந்த பொருள். 4.

வள்ளன்மை பூண்டான்கண் செல்வமும், உள்ளத்
துணர்வுடையான் ஓதிய நூலும்—புணர்வின்கண்
தக்க தறியும் தலைமகனும் இம்மூவர்
பொத்தின்றிக் காழ்த்த மரம். 5.

ஈதற்குச் செய்க பொருளை, அறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை—யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லைஇம் மூன்றும்
இருள்உலகம் சேராத வாறு 6

பத்திமை சான்ற படையும், பலர்தொகினும்,
எத்துணையும் அஞ்சா எயில்அரணும்—வைத்தமைந்த
எண்ணின் உலவா விழுநிதியும் இம்மூன்றும்
மண்ணாளும் வேந்தர்க் குறுப்பு. 7

நல்லாதனார்.

ஆசாரக்கோவை.

வைகறை யாமம் துயில்எழுந்து, தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து, வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை. 1

அரசன், உவாத்தியான், தாய், தந்தை, தம்முன்
நிகரில் குரவர் இவர்; இவரைத்
தேவரைப் போலத் தொழுதெழுக என்பதே
யாவரும் கண்ட நெறி. 2

பொய்,குறளை வெளவல் அழுக்கா றிவைநான்கும்,
ஐயம்தீர் காட்சியார் சிந்தியார்; சிந்திப்பின்
ஐயம் புகுவித் தருநிரயத் துய்த்திடும்
தெய்வமும் செற்று விடும். 3.

பாழ்மனையும், தேவ குலனும், சுடுகாடும்,
ஊர்இல் வழியெழுந்த ஒற்றை முதுமரனும்,
தாமே தமியர் புகாஅர்; பகல்வளரார்;
நோயின்மை வேண்டு பவர். 4.

அளையுறை பாம்பும், அரசும், நெருப்பும்,
முழையுறை சீயமும் என்றிவை நான்கும்
இளைய, எளிய, பயின்றனவென் றெண்ணி
இகழின் இழுக்கம் தரும். 5.

பெருவாயின் முள்ளியார்.

பழமொழி.

உணற்கினிய இந்நீர் பிறிதுழி இல்லென்னும்
கிணற்றகத்துத் தேரைபோல் ஆகார்—கணக்கினை
முற்றப் பகலும் முனியா தினிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று. 1.

கழுமலத்தில் யாத்த களிறும் கருவூர்
விழுமியோன் மேற்சென் றதனால்—விழுமிய
வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால
தீண்டா விடுதல் அரிது. 2.

75. பொலந்தார் இராமன் துணையாகத் தான்போந்(து)
இலங்கைக் கிழவற் கிளையான்—இலங்கைக்கே
பேர்ந்திறை ஆயதூஉம் பெற்றான் பெரியாரைச்
சார்ந்து கெழீஇலார் இல். 3.

அல்லல் ஒருவர்க் கடைந்தக்கால் மற்றவர்க்கு
நல்ல கிளைகள் எனப்படுவார்—நல்ல
வினைமரபின் மற்றதனை நீக்கும் அதுவே
மனைமரம் ஆய மருந்து. 4.

முட்டின் றொருவர் உடைய பொழுதின்கண்
அட்டிற்றுத் தின்பவர் ஆயிரவர் ஆபவே;
கட்டலர்தார் மார்ப! கலியூழிக் காலத்துக்
கெட்டார்க்கு நட்டாரோ இல். 5.

முன்றுறையரையனார்.

குமரேச சதகம்.

தவமதுசெய் தேபெற் றெடுத்தவன் முதற்பிதா
தனைவளர்த் தவன்ஒருபிதா
தயையாக வித்தையைச் சாற்றினவன் ஒருபிதா
சார்ந்தசற் குருஒருபிதா
அவம்அறுத் தாள்கின்ற அர(சு)ஒருபி தாநல்ல
ஆபத்து வேளைதன்னில்
அஞ்சலென் றுற்றதுயர் தீர்த்துளோன் ஒருபிதா
அன்புளமுன் னோன்ஒருபிதா
கவளம்இடும் மனைவியைப் பெற்றுளோன் ஒருபிதா
கலிதவிர்த் தவன்ஒருபிதா
காசினியில் இவ்வரைநித் தம்பிதா வென்றுளம்
கருதுவது நீதி ஆகும்

மவுலிதனில் மதிஅரவு புனைவிமலர் உதவுசிறு
மதலையென வருகுருபரா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே. 1

பதராகி னும்கனவி பூதிவிளை விக்கும்,
பழமைபெறு சுவராகினும்
பலருக்கு மறைவாகும் மாடுரிஞ் சிடும், மலம்
பன்றிகட்(கு) உபயோகமாம்,
கதமிகு கடாவென்னில் உழுதுபுவி காக்கும், வன்
கழுதையும் பொதி சுமக்கும்,
கல்லெனில் தேவர்களும் ஆலயமும் ஆம், பெரும்
கான்புற்றும் அரவமனையாம்,
இதம்இலாச் சவம்ஆகி னும்சிலர்க் குதவிசெயும்,
இழிவுறு குரங்காயினும்
இரக்கப் பிடித்தவர்க் குதவிசெயும், வாருகோல்
ஏற்றமா ளிகைவிளக்கும்,
மதமதுமி கும்பரம லோபரால் உபகாரம்
மற்றொருவ ருக்கும்உண்டோ?
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே. 2

தாய்புத்தி சொன்னால் மறுத்திடும் காலம், உயர்
தந்தையைச் சீறுகாலம்,
சற்குருவை நிந்தைசெய் காலம்,மெய்க் கடவுளைச்
சற்றும்எண் ணாதகாலம்,
பேய்தெய்வ மென்றுபச ரித்திடுங் காலம்
புரட்டருக் கேற்றகாலம்,

பெண்டாட்டி வையினும் கேட்கின்ற காலம், நற்
பெரியர்சொற் கேளாதகாலம்,
தேய்வுடன் பெரியவன் சிறுமையுறு காலம், மிகு
சிறியவன் பெருகுகாலம்,
செருவில்விட் டோடினோர் வரிசைபெறு காலம்,வசை
செப்புவோர்க் குதவுகாலம்,
வாய்மதம் பேசிவிடும் அனியாய காரர்க்கு
வாய்த்தகலி காலம் ஐயா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே. 3

குருபாத தாசர்.

தண்டலையார் சதகம்.

முக்கணர்தண் டலைநாட்டில் கற்புடைமங்
கையர்மகிமை மொழியப் போமோ?
ஒக்கும்எரி குளிரவைத்தாள் ஒருத்தி, வில்வே
டனைஎரித்தாள் ஒருத்தி, மூவர்
பக்கம்உற அமுதளித்தாள் ஒருத்தி,எழு
பரிதடுத்தாள் ஒருத்தி, பண்டு
கொக்கெனவே நினைந்தனையோ? கொங்கணவா!
என்றொருத்தி கூறி னாளே. 1

அல்லமரும் குழலாளை வரகுணபாண் டியராசர்
அன்பால் ஈந்தார்;
கல்லைதனில் மென்றுமிழ்ந்த ஊன்அமுதைக் கண்ணப்பர்
கனிவால் ஈந்தார்;
சொல்லியதண் டலையார்க்குக் கீரையும்மா வடுவும்ஒரு
தொண்டர் ஈந்தார்;

நல்லதுகண்டாற் பெரியோர் நாயகனுக் கென்றதனை
நல்கு வாரே. 2

காதிலே திருவேடம் கையிலே செபமாலை
கழுத்தின் மார்பின்
மீதிலே தாழ்வடங்கள் மனதிலே கரவடம்ஆம்
வேடம் ஆமோ?
வாதிலே அயன்தேடும் தண்டலைநீ ணெறியாரே
மனிதர் காணும்
போதிலே மவுனம்இராப் போதிலே உருத்திராக்கப்
பூனை தானே. 3

மானென்று வடிவெடுத்து மாரீசன் போய்மடிந்தான்;
மானே யென்று
தேனென்று மொழிபேசிச் சீதைதனைச் சிறையிருக்கத்
திருடிச் சென்றோன்
வானென்றும் அரசிழந்தான்; தண்டலையார் திருஉளத்தின்
மகிமை காணீர்!
தானென்று நினைக்கையிலே தெய்வம்ஒன்று நினைப்பதுவும்
சகசம் தானே. 4

படிக்காசுத் தம்பிரான்.

ரு. தனிப் பாடற் பகுதி.

முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்திரண்டு பேர்தள்ள-எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம்போம் காத வழி. 1

கண்ணபுர மாலே கடவுளிலும் நீஅதிகம்
உன்னிலுமே யான்அதிகம் ஒன்றுகேள்-முன்னமே
உன் பிறப்போ பத்தாம் உயர்சிவனுக் கொன்றுமிலே
என்பிறப்(பு) எண் ணத்தொலே யா. 2

காரென்று பேர்படைத்தாய் ககனத் துறும்போது
நீரென்று பேர்படைத்தாய் நெடுந்தரையில் வந்ததற்பின்
தாரொன்று நீள்குழலார் ஆய்ச்சியர்கை தனேயடைந்து
மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றுயே. 3

வில்லால்அடிக்கச்செருப்பால் உதைக்கவெகுண்டொருவன்
கல்லால் எறியப் பிரம்பால் அடிக்கஇக் காசினியில்
அல்லார் பொழிற்றில்லேஅம்பலவாணற்(கு)ஓர்அன்னேபிதா
இல்லாத தாழ்வல்ல வோஇங்ங னேஎளி தானதுவே. 4

காளமேகப் புலவர்.

காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணெக்க வாய்திறக்க மாட்டாதே-வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி எரிகின்ற தையையோ!
அன்பில்லாள் இட்ட அமுது. 1

கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்!
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினும் கொடிது இளமையில் வறுமை
அதனினும் கொடிது ஆற்றெணுக் கொடுநோய்
அதனினும் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினும் கொடிது
இன்புற அவர்கையில் உண்பது தானே. 2

இனியது கேட்கில் தனிநெடு வேலோய்
இனிது இனிது ஏகாந்தம் இனிது

அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்
அதனினும் இனிது அறிவினர்ச் சேர்தல்
அதனினும் இனிது அறிவுள்ளோரைக்
கனவினும் நனவினும் காண்பது தானே. 3

ஔவையார்.

மூங்கிலிலே ஒளித்திருந்தான் முக்கண் சாமி
முதியகடற் போய்ப்படுத்தான் முகுந்த சாமி
தாம்கமலப் பொகுட்டுறைந்தான் தலேநாற் சாமி
தடவரையில் உழன்றுநின்றான் தகப்பன் சாமி
வாங்கியுண்ண வழிகாத்தான் வயிற்றுச் சாமி
வாணருக்கிங் குதவுவரார் மற்றோர் சாமி
ஓங்கிய சீர் மயிலேயிற்பொன் னப்ப சாமி
உதவியவேங் கடசாமி உசித வேளே. 1

கல்லாத ஒருவனேநான் கற்றாய் என்றேன்
காடெறியும் மறவனேநா டாள்வாய் என்றேன்
பொல்லாத ஒருவனே நான் நல்லாய் என்றேன்
போர்முகத்தை அறியானேப் புலியே(று) என்றேன்
மல்லாரும் புயம் என்றேன் சூம்பற் றோளே
வழங்காத கையனேநான் வள்ளல் என்றேன்
இல்லாது சொன்னேனுக் கில்லே யென்றான்
யானும் என்றன் குற்றத்தால் ஏகின் றேனே. 2

இராமச்சந்திரக்கவிராயர்.

இட்டமுடன் முதலியார் வாங்கிவந்த காளேதினம்
இருபோர் தின்னும்
சட்டமுடன் கொள்ளுண்ணும் புல்லுண்ணும் அதைப்பண்டி
தன்னிற் பூட்டக்

கிட்டவரின் முட்டவரும் தொட்டவர்மே லேகழியும்
கீழே வீழும்
எட்டாள்கள் தூக்கிடினும் தடிகொண்டு தாக்கிடினும்
எழுந்தி ராதே. 1.

அருங்கிரியே கற்பகமே காளேயே அனந்தனே
அரியே என்ன
ஒருங்குநமை யேபுகழ்ந்து பொருள்கேட்ட ஒருவனையாம்
உற்று நோக்கி
இருங்கல்லே மரமேமா டேபாம்பே மிருகமே
யென்றேம் காய்ந்தான்
மருங்கவன்வார்த் தையைத்திருப்பி நாம்சொன்னல்
அவனுக்கேன் வருத்தம் அம்மா! 2.

வேதநாயகம் பிள்ளை.

தேங்குபுகழ் நாங்கூர்ச் சிவனேயல் லாளியப்பா
நாங்கள் பசித்திருக்கை ஞாயமோ?—போங்காணும்
கூறுசங்கு தோல்முரசு கொட்டோசை அல்லாமல்
சோறுகண்ட மூளியார் சொல். 1.

குன்றும் குழியும் குறுகி வழிநடந்து
சென்று திரிவதென்றும் தீராதோ?—ஒன்றும்
கொடாதானைக் காவென்றும் கோவென்றும் கூறில்
இடாதோ நமக்கிவ் விடர். 2.

இரட்டைப்புலவர்.

எல்லாம்இத் துணையவெனும் என்புடைய முனிவரராய்ச்,
செல்லாத இடங்கள்எலாம் சென்றுவரும் சித்தர்களாய்,
ஒல்லாத ஒருநிலையில் நெடிதிருக்கும் யோகர்களாய்ப்,
பல்லாரும் ஆவர்உன தருட்கடைக்கண் பற்றிடினே. 1.

ஓங்கியவிப் பிறவியதாம் வேலையெலாம் ஒழித்திடுவாய்,
ஆங்கதனோ டினிவருவாய் உளதேனும் அடைத்திடுவாய்,
பாங்குபெறும் வீட்டையைப் பயில்விப்பாய், பார்க்குமிடத்
தீங்கிதனுற் றுன்போலும் பிணிவீடே வீடெனலே. 2.

R. வேங்கடாசலம் பிள்ளை.

---

௬. கதைப்பகுதி.

தமயந்தி மணம்.

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று. 1.

மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென்(று) இயலணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து. 2.

காவலரைத் தன்சேடி காட்டக்கண்(டு) ஈர்இருவர்
தேவர் நளன்உருவாச் சென்றிருந்தார்—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணுகின்(று)
ஊசலா டுற்றாள் உளம். 3.

கண்இமைத்த லால்அடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால்—எண்ணி
நறும்தா மரைவிரும்பும் நன்னுதலே யன்னாள்
அறிந்தாள் நளன்றன்னை ஆங்கு. 4.

விண்ணரசர் எல்லாரும் வெள்கி மனம்சுளிக்கக்
கண்அகல் ஞாலம் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தன்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். 5.

இங்ஙனம் நளனுக்குத் தமயந்தி மாலையிட்ட உடன் மிகுந்த மகிழ்ச்சியோடு அவன் அரசவையை அகன்று தன் உறைவிடத்தை உற்றான். மற்றைய அரசர்கள் முகச்சோர்வு உடையவராய் நீங்கினர். விண்ணவர்கோன், நீர்க்கடவுள், தீக்கடவுள், அறக்கடவுள் முதலிய நான்கு தேவரும் தமயந்தியின் திருமாலையைப் பெறுமையால் மிகுந்த துயருடன் விண்ணேறிப் படர்ந்தனர். அதுபோது அவர்கள் முன்னர் மிகுந்த விரைவுடன் சனிக்கடவுள் வந்துகொண்டிருந்தான். சனிக்கடவுளை விண்ணவர்கோன் நோக்கி:—

ஈங்குவர வென்னென்(று) இமையவர்தம் கோன்வினவத்
தீங்கு தருகலியும் செப்பினான்—நீங்கள்
விருப்பான வீமன் திருமடந்தை யோடும்
இருப்பான் வருகின்றேன் யான். 6.

என்று சனிக்கடவுள் கூற இந்திரன், தமயந்தி நளனுக்கு மாலையிட்டாள். ஆதலால் உனது உள்ளக் கருத்தை ஒழித்து ஏகுக என்றான். உடனே சனிக்கடவுள்:—

விண்ணரசர் நிற்க வெறுத்தேன் மணமாலை
மண்ணரசர்க்(கு) ஈந்த மடமாதின்—எண்ணம்
கெடுக்கின்றேன் மற்றவள்தன் கேள்வனுக்குங் கீழ்மை
கொடுக்கின்றேன் என்றான் கொதித்து. 7.

வாய்மையும் செங்கோல் வளனும் மனத்தின்கண்
தூய்மையும் மற்றவன் தோள்வலியும்—பூமான்

நெடுங்கற்பும் மற்றவற்கு நின்றுரைத்துப் போனான்
அடும்கொற்ற வச்சிரத்தான் ஆங்கு. 8.

பின்னர், சனிக்கடவுள் "நளனையும் தமயந்தியையும் பிரித்துத் துன்புறச் செய்வேன்" என்று சூள் உரைத்துச் சென்றனன்.

வெங்கதிரோன் தானும் விதர்ப்பன் திருமடந்தை
மங்கலநாள் காண வருவான்போல்—செங்குமுதம்
வாயடங்க மன்னற்கும் வஞ்சிக்கும் நன்னெஞ்சில்
தீயடங்க ஏறினான் தேர். 9.

கணிமொழிந்த நாளிற் கடிமணமும் செய்தார்
அணிமொழிக்கும் அண்ணல் அவற்கும்—பணிமொழியால்
குற்றேவல் செய்யக் கொழும்பொன் தவிசுறைந்தார்
மற்றெவரும் போற்ற மகிழ்ந்து. 10.

தையல் தளிர்க்கரங்கள் தன்தடக்கை யால்பற்றி
வைய முழுதும் மகிழ் தூங்கத்—தூய்ய
மணந்தான் முடித்ததற்பின் வாணுதலும் தானும்
புணர்ந்தார் நெடுங்காலம் புக்கு. 11.

புகழேந்தியார்.

நளாயினி மணம்.

நல்லோர் மொழிகேட்பான் நாளும் அறம்புரிவான்
பல்லோர் புகழ்ந்திடும் பண்புடையான்—எல்லா
உயிர்களையும் தன்னுயிரை ஒப்பவே காப்பான்
அயில்வேற் கரநளன் ஆம். 1.

அன்னோன் தவப்பயனாய் அங்குதித்த பெண்ணரசி
தன்னை யிணைஒவ்வாத் தார்குழலாள்—கன்னி
நளாயினி நாமத்தாள் நற்பண்(பு) உடைய
வளாம்என உள்ளாள் வளர்ந்து. 2.

அன்ன நடையுடையாள் அன்பின் உருவுடையாள்
கன்னல் மொழியுடையாள் காரிகை—தன்னழகால்
இந்திரையோ! வாணியோ! ஏர்திருவோ! பார்வதியோ!
எந்தநிலப் பெண்ணோ! இவள். 3.

என்று கூறத்தகுந்த இத்தகைய பேரழகும் நற்குணமும் அமைந்த பெண்மணிக்கு ஏற்ற கொழுநன் யாரென ஆராய்ந்து நளன் தனக்குள் எண்ணலாயினன்.

கல்வி உடையார்க்குச் செல்வக் குறைவுளதால்
செல்வம் உடையார்க்குக் கல்விக் குறைவுளதால்
இவ்விரண்டும் உற்றவர்க்கோ ! ஏற்றகுணம் இலையால்
எவ்வகைதான் செய்வேன் இனி. 4.

பெண்கள் விரும்பும் கணவனையே பெற்றோர்கள்
கொண்கனச் சேர்த்தல் குணம்உடைத்துப்—பண்பார்
குமரர்க்கும் அவ்வாறு கூட்டுதலே நன்மை
அமரும் வழியெனவே ஆய்ந்து. 5.

முத்தநகைச் செவ்வதர மொய்குழல்என் பெண்ணரசிக்(கு)
ஒத்த கணவன் உறுங்காலம்—எத்தினமோ !
என்றெண்ணி நாள்நாளும் ஏக்கமே மேலாட
ஒன்றினன் நல்லறமே உற்று. 6.

நளன் இந்நிலையில் இருக்கும் அமயம், மௌற்கல்ய முனிவர் என்பவர் கற்புடை நங்கை ஒருத்தியைக் கடிமணம் முடித்து இல்லறத்தை நடாத்த வேண்டுமென்னும் விருப்புடையர் ஆயினர். தனக்கேற்ற மங்கை யாரென எண்ணி முடிவில் நளன் பெண்ணாகிய நளாயினியே தகுதியுடையவள் என முடிவு செய்துகொண்டு, நளனிடம் வந்து சேர்ந்தார்.

ஆங்கவன் ஆன்றோர்பால் அன்புடையன் ஆதலால்
ஓங்கிடம் தானீந்(து) உவந்தேதத்த—தேங்கும்
சுருதியால் ஆசிமொழி சொற்றிடவே வேந்தன்
கருதிவந்த(து) என்? என்றான் காண். 7.

முனிவர், உனது மகள் நளாயினியை எனக்குக் கடி மணம் முடித்துத் தருதல் வேண்டுமென அரசனைக் கேட்டார். உடனே அரசன் மனத்துயரம் உற்றவனாய்:—

ஈவதற்(கு) ஒப்பேன் எனவுரைப்பின் இம்முனிவன்
கோவமிக் குற்றே கொடுஞ்சாபம்-ஏவினால்
செய்வதென் னுள்ள(து)? எனச்செம்மையுடன் ஆராய்ந்தே
உய்யும்நெறி ஒன்றை உணர்ந்து. 8.

நளன், முனிவரை நோக்கி, ஐயீர்! தாங்கள் எனது மகள் நளாயினியின்பாற் சென்று, அவள் ஒருப்பாட்டைப் பெற்று வருவீராயின் மணம் முடிக்கின்றேன்: அவளுடைய ஒப்பின்றி மணமுடித்தல் ஒண்ணாது என்றனன்.

பெற்றோன் மொழிகேட்டுப் பேரார் தவமுனிவன்
எற்றாலும் நம்எண்ணம் ஈடேறும்-இற்றைக்கே
என்று மகிழ்வுடனே ஏற்ற கிழத்தன்மை
சென்றே ஒழியச் சிறந்து. 9.

கண்டோர்கள் ஆசையுறும் காமன் உருக்கொண்டே
வண்டார் குழலணங்கின் வாய்ச்சென்றான்—திண்டோள்
வலியுடைய கொற்றவன்போல் வந்துற்ற நோன்பு
மலிமுனியைப் பார்த்தனள்அம் மாது. 10.

நளாயினி முனிவரின் பொலி வனப்பைக் கண்ணுற்று, அவர்மீது காதலுற்றுத் தலைகவிழ்த்து நின்றாள். முனிவர் நளாயினியின் குறிப்பை உணர்ந்தவராய் என்னை மணம்

புரிந்துகொள்ள விரும்புவையேல் அவ்விருப்பிற்கு அறி குறியாக யாதேனும் ஒன்றைத் தருக என்றனர். உடனே,

மாதும் உவந்து மலர்க்கை விரல்ஆழி
ஏதும் தடைகூறு(து) ஈந்தனள்—மீதுமே
பொன்னுடைய மைந்தனிலும் பொற்புடைய ஆடவனே
மன்னிடுவார் மாதர் மனம். 11.

காந்தள்அம் செங்கையாள் கண்டவுடன் காதலோ(டு)
ஈந்த கணையாழி ஏற்றமுனி—போந்ததன்
காளை உருவகற்றிக் கண்ட கிழஉருவாய்
வாளை உடைமன்முன் வந்து. 12.

ஒவ்வார் படைக்குழுவை ஓட்டிப் புகழ்பெறும்
செவ்வேற் படைக்கரத்துச் சீர்நளனே!—கொவ்வைக்
கனிவாய் நளாயினியின் கைவிரல் ஆழி
முனிநான் அடைந்தேன் முடி. 13.

என்று கூறியவுடன், நளன் சிறிது துணுக்குற்றவனாய் நளாயினியை அழைத்து, இம் முனிவர்க்கு நீ நினது கணையாழியை அளித்தனையோ? என்ன, அவள் முனிவர் உருவைக்கண்டு, நம்பால் உற்றவர் இவரன்றே! ஆழியையும் இவர்பால் அளித்தோம் இல்லையே! இவர் கையில் எனது ஆழி எவ்வாறு அடைந்தது? இஃது ஏதோ வஞ்சகச் செயலாகவன்றோ இருக்கின்றது! என்று இவ்வாறு எண்ணிக்கொண்டு பெருவியப்புற்றவளாய் ஒன்றும் உரையாமல் நின்றாள். இதை அரசன் கண்டு, ஒருப்பாட்டுடனேயே மோதிரத்தைக் கொடுத்திருத்தல் கூடுமென ஊகித்துத் திருமணம் முடிக்கத் தீர்மானித்தனன். உடனே.

மன்றலுக்கு வேண்டுவன யாவையும் தார்மன்னன்
ஒன்றும் மனத்தோ(டு) உஞற்றியே—நின்ற

தவமுனிக்கு நேரிழையைத் தந்தனன் அன்பாய்ச்
சிவன்அடியே சிந்திக்கும் வேந்து. 14

சிதம்பரன்.

பஞ்சதந்திரம்.

திரைகெழு கங்கா தீரத்
திரிகூட மலைப்பால் இத்திப்
பருமரப் பொந்தில் கண்ணும்
பைத்தகூர் நகமும் இல்லா
ஒருகிழக் கழுகு மற்றைப்
பறவைகள் உணவு நல்க
மருவுநாள் பார்ப்பை உண்பான்
மார்க்கசா லம்வந்த தாங்கே. 1

அதைச்சிறு பார்ப்பெ லாங்கண்(டு)
அஞ்சியே இரைதல் கேட்டு
பதைப்பறு கழுகு நீரேன்
பயம் உறு கின்றீர் என்ன
இதற்குளே பூனை உய்வ(து)
எண்ணிஅக் கழுகின் பாற்போய்
விதிர்ப்பொடு வணங்க நீயார்?
விளம்(பு) எனப் பூனை கூறும். 2

வேறு.

எனது பெயர் நெடுஞ்செவியன்
எனக்கழுகு நீயிவண் விட்(டு)
உனதிடத்திற்(கு) ஓடிலையேல்
சாவாய் என்(று) உரைத்திடலும்

நினதிடத்தில் வரும்என்றன்
வரலாற்றை நீகேட்டுச்
சினவுகினும் நன்றென்னச்
செப்புமால் அப்பூனை. 3

பேதமாம் சாதியினல் பிராணிகளைக் கொல்லுவதும்
நீதியால் உபசாரம் நிகழ்த்துவதும் நன்றன்றல்
ஆதலால் அவனவன்றன் ஆசாரந் தனைக்கண்டே
யாதுசெயத் தக்கதோ அதுசெய்தல் இயல்பென்ன. 4

ஆக்கமிகும் கழுகரசன் அதைக்கேட்(டு)இப் பூனையினை
நோக்கிஆ னல்நீஇங்(கு) உற்றபடி நுவல்என்னத்
தேக்குபுனல் கங்கைநதி தீரத்தில் தினந்தோறும்
ஆக்கையமிழ்ந் திடமூழ்கிச் சாந்திரா யணம்ஆற்றி. 5

தங்குற்றேன் நீமிகவும் தருமவான் எனக்கேட்டே
இங்குற்றேன் என்என்னில் வயதுமுதிர் இயற்புலவர்
எங்குற்றூர் எனவினவி எய்திஅறம் கேட்டிடுதல்
பொங்குற்ற மரபென்று புகலுவர்எந் நூலோரும். 6

அறம்விடுத்திட்(டு) எனைக்கொல்ல
அகம்துணிந்தாய் இல்லறத்தின்
திறம்அடுத்தோர் நடைநின்போற்
கண்டிலே தெவ்வரும்தம்
புறம்அடுத்து வந்தவர்க்குப்
புரிந்திடுவர் உபசாரம்
மறமடுத்து வெட்டுகின்ற
வருக்கும் நிழல் செயும்மரமே. 7

என்றிசைப்பக் கழு(கு) அதைக்கேட்(டு)
இயம்பும்இறைச் சிகள்அருந்திக்

கொன்(று) உழல்வ(து) உமதுகுலக்
குணமெனமுன் குறித்த(து) என
நின்(று) அவண்மற் றதைக்கேட்ட
நெடுஞ்செவியன் தரைதொட்டு
நன்றுசிவ சிவஎன்று
நற்கரத்தால் செவிபொத்தி. 8.

தருமநூல் பலதெரிந்து சார்ந்துவை ராக்கியம்தீக்
கருமம் எலாம் நீக்கினென்யான் கடும்கொலையே பாதகத்தில்
பெரிதாகும் அதுபுரியின் நரகடைவர் பெருங்கானின்
மருவுபலா திகள்உண்பார் மருவுவரோ பாவம்என, 9.

கடுங்கழுகு தெளியுமா(று)
இவ்வாறு கட்டுரைத்து
நெடுஞ் செவியன் எனும்பூனை
நிலைத்த(அ)தன் வீ(டு) உற்றதற்பின்
மடம்படு பார்ப்பினை உண்டு
வைகுதலும் பறவையெலாம்
ஒடுங்குபறழ் காணமல்
தேடல் அறிந்(து) ஓடியவே. 10.

புள்ளுகள் அக் கழுகிருக்கும்
பொந்தடைந்து பார்த்திடலும்
வெள்ளெலும்பும் சிறகுகளும்
விழுந்துறக் கண்(டு) இதுகொன்ற(து)
எள்ளலில் நம் பார்ப்பையெனக்
கொன்றதால் அதை, இதனல்
உள்ளகுணம் தெரியாமல் இடம்
கொடார் ஒருவருக்கும். 11.

வீரமார்த்தாண்ட தேவர்.

திருவிளையாடற் புராணம்.

குண்டோதரனுக்கு அன்னம் இட்ட படலம்.

கன்னி யர்க்கர சாயினள். கடிமனை புகுந்த
பின்னி யற்சடை மாதவர் வேதியர் ஏனோர்
எந்நி லத்துள் மன்னவர் யாவர்க்கும் முறையே
பொன்னி யற்கலத்(து)அறுசுவைப் போனகம் அருத்தா. 1

பூசு கின்றவும் உடுப்பவும் பூண்பவும் பழுக்காய்
வாச மெல்லிலை எனவும் அம்முறை வழங்காத்
தேச மன்னவர் ஏனையோர் செல்லுநர்ச் செலுத்தி
சன் அன்புறு கற்பினள் இருக்கும் அவ்வேலை. 2

மடைவளத்தொழிற் புலவர்வந்(து) அடியிணைவணங்கி
புடியவரேம் அட்ட போனகம் ஆயிரத் தொன்றின்
டைய தாயினும் தொலைந்தில(து) யாங்கள், மேற்செய்யக்
வ(து) ஏதெனப் பிராட்டி, தன் கணவர்முன் குறுகா. 3

குறுகிய பிராட்டியார், ஐயனே! தங்களுடன் போதரும் பெருந்திரளான தேவர்களுக்கெலாம் வேண்டுமென எண்ணி மிகுந்த சோறும் கறிகளும் ஆக்கப்பட்டன. அச்சோறும் கறிகளும் குன்றுகுன்றாகக் குவிந்து கிடக்கின்றன. அவற்றை எவ்வகையிற் செலவு செய்வதென அறியேன் என்று கூறினள்.

என்றபோ(து) இறை, எம்பிரான் தேவியாரிடத்தில்
ஒன்றும் அன்பினால் ஒருவிளையாடலை நினைந்தோ!
தன்ற னிக்குடைப் பாரிடத் தலைவன(து) ஆற்றல்
அன்று யாவரும் அறிந்திடக் காட்டவோ; அறியேம். 4

சிறிது வாணகை செய்தமூ வேந்தரிற் சிறந்த
மறுவில் மீனவன் அரும்பெறன் மகள்! உனக்(கு)அரிதில்
பெறுவதேது? வான் தருவுநின் பணிசெயப் பெற்றிங்(கு)
உறைவதேற்பிறர் திருவெலாம் உன்னதே அன்றோ? 5

அளவி லாதநின் செல்வத்தின் பெருக்கை நாம் அறிய
விளைவு செய்தனை போலும்நின் விருந்துணப் பசியால்
களைய டைந்தவர் ஆகிநம் கணத்தினுட் காணேம்
தளவ மூரலாய்! யாம்செயத் தக்க(து) ஏதென்றான். 6

அடுக்க நின்ற குண்டோதரன் அகட்டிடை வடவை
மடுக்க உன்னினான்; அதுவந்து வயிற்றெரி பசியாத்
தொடுக்க,ஆலமுண் டாங்(கு)உடல்சோர்ந்துவேர்த்(து)ஆவி
ஒடுக்கம் உற்(று), ஐய! பசியினால் உயங்கினேன் என்றான். 7

குடை எடுக்கும் இக்குறியதாள் குறட்(கு) ஒரு பிடிசோறு
இடுமின் அப்புறம் சோறுமால் எனத்,தொழு தெல்லாம்
உடைய நாயகி போயினாள், குறியனும் உடனே
நடை தளர்ந்து கண் புகைந்து வாய் புலர்ந்திட நடந்தான். 8

படைக்கண் ஏவலர் இறைமகள்பணியினால் பசிநோய்
தொடுத்த வன்றனைக் கொண்டுபோய்ச் சொன்றிமுன் விடுத்தார்
அடுத்தி ருந்ததே கண்டனர் அன்ன மா மலையை
எடுத்த யின்றதும் அடிசில்அங் கிருந்ததும் காணார். 9

இச்செயலைக் கண்டு ஆங்கிருந்த பெண்மக்கள் அனைவரும் வியப்புற்றனர். அவ்வுண்டியனைத்தையும் உண்டும், குண்டோதரனுக்குப் பசிநோய் அகன்றபாடில்லை. ஆதலால் சமைப்பதற்காக ஆண்டிருந்த அரிசி, கறி, கிழங்கு, பால், தயிர், நெய், தேன் முதலிய எல்லாப் பொருள்களையும் எடுத்துண்டான். மீண்டும் பசித்தழல் தணியாதவனாய் வருந்தி நின்றான். இந்நிலையை:—

அலங்கல் ஓதிகண்(டு) அதிசயம் அடைந்துதன் அன்பின்
நலங்கொள் நாயகன் முன்புபோய் நாணம்உட் கிடப்ப
இலங்கு பூங்குழல் சுவல்மிசை இறக்கியிட்(டு) ஒல்கி
நிலம் கிளைத்துநின் றுள்நிலை கண்டனன் நிருபன். 10

அஞ்சில் ஓதியை வினவுவான் அறிகலான் போலக்
குஞ்சி ஆரழல் அன்ன அக் குடவயிற்றவன் உண்(டு)
எஞ்சி உள்ளவேல் பூதங்கள் இன்னமும் விடுத்துன்
நெஞ்சு வப்பவே அருத்துதும் என்னவும், நிமலை. 11

ஐய! இன்னும்இக் குறட்பசி யடங்கிடா! வேறு
வெய்ய பாரிட வீரரை விடுத்தியேல் எடுத்து
வையம் யாவையும் வயிற்றிடை வைப்பரே! அதனால்
செய்ய காலருத் திரப்பெயர் தேற்றமாம் உனக்கே! 12

என்று கூறிக்கொண்டிருக்கும் பொழுது, குண்டோதரன் பசிப்பிணியைப் பொறுக்க வியலாதவனாய்ச் சோமசுந்தரன்பால் அணுகி:—

நட்டம் ஆடிய சுந்தர! நங்கையெம் பிராட்டி
அட்ட போனகம் பனிவரை அனையவாய்க் கிடந்த
தொட்டு வாய்மடுத் திடவும்என் சுடுபசி தணியா(து)
இட்டு (உ)ணாதவர் வயிறுபோற் காந்துவ தென்றான். 13

கையர் முப்புரத்(து) இட்டதீக் கடும்பசி உருவாய்ப்
பொய்ய னேன்வயிற் றிடைக்குடி புகுந்ததோ என்னும்,
கையெறிந்திடும் அண்டங்கள் வெடிபடக் கதறும்,
ஐய கோவெனும், உயர்ந்திடும், ஆவிசோர்ந்(து) அயரும். 14

பின்னர், சோமசுந்தரக்கடவுள் பூதத்தின் நிலையைக் கண்டு இரக்கம் உற்று, உண்ணக் குறையாத ஒரு அன்னக் குழியை உண்டாக்கி அதில் உண்டு, பசி நீங்கு மாறும், வையை யாற்றைப் பெருகிவரச் செய்து அதனைப் பருகி நீர் வேட்கை யடங்கு மாறும் அருள் செய்தார். வாழி.

பரஞ்சோதி முனிவர்.

குறிப்புரை.

க. வணக்கப்பகுதி.

சேக்கிழார்.

உலகு எலாம்-பெரியோர்கள் எல்லோராலும். நிலவு உலாவிய-சந்திரன் வசிக்கின்ற. மலி-நிறைந்த வேணியன்-சடையை உடையவன். மலர் சிலம்பு அடி-(ஒளி) விரிகின்ற சிலம்பை அணிந்த அடியை. ஆடுவான்-வினையாலணையும் பெயர். யாம் தோன்றா எழுவாய். வணங்குவாம் பயனிலை. அடி செயப்படு பொருள். உலாவிய என்னும் பெயரெச்சம் வேணியன் என்னும் பெயரைக்கொண்டது. மலிவேணி, மலர்சிலம்பு வினைத்தொகை.

மணிவாசகர்.

விளைந்த-உண்டாகிய. ஆர்அமுதே-அரிய அமுதமே. பொழுதினைச்சுருக்கும்-(வீண்பொழுது போக்கி) ஆயுள் நாளைக் குறைத்துக் கொண்டிருக்கும். இம்மையே-இப்பிறப்பிலேயே. சிக்கென-உறுதியாக. இலாத ஈறுகெட்டு இலா என்றாயிற்று; ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். பிடித்தேன் தன்மை யொருமை இறந்த கால வினைமுற்று. (பிடி + த் + த் + என்) த்=சந்தி. (2)

வேண்டேன்-விரும்பேன். அமையும்-போதும், கூத்தா-சிவபெருமானே. கழல்-வீரகண்டாமணியை அணிந்த பாதம். கற்றா-(கன்று ஆ)-கன்றையுடைய பசு. கற்ற வலித்தல் விகாரம். உற்றார் உறு-பகுதி-இரட்டித்து இறந்த காலங் காட்டிற்று. இப்பாட்டிலுள்ள வினையால் அணையும் பெயர்கள் யாவை? (3)

திருநாவுக்கரசர்.

கடம்பன்-முருகப்பிரான். அவனைப் பெற்றவள் பார்வதி தேவி. பங்கினன்-இடப்பாகத்திலுடையவன். தென்கடம்பை-இது ஒரு சிவஸ்தலம். திருக்கரக்கோயில் - அத்தலத்திலுள்ள கோயிலுக்குப் பெயர். கடன்-கடமை. தாங்குதல்-காப்பாற்றுதல். பணி-தொண்டு. செய்து வினையெச்சம் கிடப்பதென்னும் தொழிற்பெயர் கொண்டு முடிந்தது. வினையெச்சம் எவ்வெச் சொற்களைக் கொண்டுமுடியும்? ஒவ்வோர் உதாரணம் தருக. (4)

பண்-பாடல். இசை-இராகம். பாவிப்பார்-சிந்திப்பார். எண்-கணக்கு. சொல்-சொல்லும். சிந்தை-மனம். போற்றி-வணக்கம். 5

திருஞானசம்பந்தர்.

அன்புறு - அன்புஉறு. உறு-மிகுந்த. **நண்புஉறு** - எதுகை நோக்கி நன்புஉறு என்றாயிற்று. நண்புஉறு-விரும்புகின்ற. நல்லூர்ப்பெருமணம்-திருநல்லூரில் உள்ள பெருமணம் என்னும் கோயில். மேவிநின்று-வீற்றிருந்து. எந்தை-எம்தந்தை. இணையடி-ஒன்றிற்கு ஒன்று இணையாகும் அடிகள். அன்பு+உறு; நண்பு+உறு. இன்பு+உறு-துன்பு+உறு. இவை **உயிர்வரின் உக்குறள்** என்னும் சூத்திரப்படி புணர்ந்தன. (6)

சுந்தரர்.

பொன்ஆர் - பொன்போன்றஒளிபொருந்திய. அரைக்கு அசைத்து-இடுப்பில்கட்டி. கு உருபு மயக்கம். மிளிர்-விளங்குகின்ற. மழபாடியுள்-திருமழபாடி யென்னும் தலத்தில். நினைக்கேன்-நினைப்பேன். (உன்னையல்லாமல் வேறு ஒரு தேவரை நினைத்துப் போற்றமாட்டேன் என்பது கருத்து)...இதிலுள்ள குற்றியலுகரத்தின் முன் உயிர் வந்த புணர்ச்சி யாது? (7)

சடகோபர்.

என்கோ-என்று சொல்லுவேனோ. அம்கதிர்-அழகியஒளி. அஞ்சனம்-கருமை. வண்ணன்-நிறத்தையுடையவன். செங்கதிர்-சூரியன். திரு-மறு-இலக்குமியை மறுவாகக் கொண்டுள்ள. சாதி-உயர்வு. (8)

ஒளிர்மணி-ஈண்டு நீலமணியைக் குறித்து நின்றது. ஒருவன் ஒப்பற்றவன். எத்த-தொழ. நளிர்-குளிர்ச்சி அல்லது பெருமை. அளி-இரக்கம். களி-மகிழ்ச்சியைத் தருகின்ற. துளவன்-துளசி மாலையை அணிந்தவன். (9)

பிள்ளைப்பெருமாள் அய்யங்கார்.

வை-கூர்மை, கலந்த-பொருந்திய. வாசவன்-இந்திரன், வாசப்பூ-தாமரைமலர். விரிஞ்சன்-பிரமதேவன். மாது, ஓ, இரண்

டும் அசைகள். பை-பாம்பின்படம். அணே-படுக்கை. நேமி-சக்ராயுதம். கலந்த என்னும் சொற்கள் நான்கும் பெயரெச்சங்கள். கற்றர் எழுவாய். வீற்றிருப்பர் பயனிலே. (10)

படைத்தாரேனும்-உடையவராயினும். அடிகள் - கடவுள். சதுர்மறை-நான்கு வேதம. வேள்வி-யாகம். போது-தாமரைமலர். அரங்கம்-திருவரங்கம். ஆற்றின் நடுவில் உள்ள இடத்திற்கு அரங்கம் என்று பெயர். (11)

அதிவீரராமபாண்டியன்.

நம்பி-நம்பியே. வேட்டு-விரும்பி. கலம்-கப்பல். வெம்பு-வருந்துகின்ற- கும்பமுனி-அகத்தியமுனிவா. கொற்றவன்-வெற்றியையுடையவன். திருக்கருவை என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு, முகலிங்கர், பால்வண்ணநாதர், திருக்களாவீசர் என்பன பெயர்கள். தும்பை-தும்பைமலர். புரக்க-காப்பாற்ற. (12)

அண்டர்-தேவர்கள். தெள்திரை-கடல். வளாகம்-உலகம். களா-களாமரம். இது திருக்கருவையின் தலவிருட்சம். நீ என்னும் முன்னிலே ஒருமைப்பெயர் உன் எனத்திரிந்து வேற்றுமையுருபேற்றது. (13)

இராமலிங்கசுவாமிகள்.

இறையே-தலேவனே. இரும்-பெரிய. உணர்வு-அறிவு. வன்பர்-அன்பில்லாதவர். வடி-கூர்மை. திடர்-மலே. துன்பத்திடர்-பண்புத்தொகை- (14)

விண்-ஆகாயம். பண்-பாடல். உறு-உள்ள எண்ணுறும்-நினேக்கின்ற. (15)

சிதம்பரன்.

கனிந்து-உருகி. பண்புற-நலம்அடையுமாறு. பாலிக்கும்-அருளேத்தரும். அத்தி-யானே. உரி-தோல். நெறியே-வழியாயிருப்பவனே. சந்ததம்-எப்பொழுதும். (16)

உ. தமிழ்ப்பகுதி.

R. வேங்கடாசலம் பிள்ளை.

வான் ஆர்ந்த-ஆகாயத்தைப் பொருந்திய. இது உயரத்தைக் குறித்து நின்றது. மூவேந்தர்-சேர சோழ பாண்டியர்கள். தேன் ஆர்ந்த-தேன் நிறைந்த. சால்-மிகுந்த. திருமாலின் குன்றம்-திருவேங்கடம் (திருப்பதி) குமரி-குமரிமலை ஆயிடை-ஆகிய இவ்விரண்டு எல்லைக்கும் உட்பட்ட நாட்டில். கான் ஆர்ந்த-வாசனை நிறைந்த. கண்புலம் சேர்தேவி-கண்கண்ட தெய்வமே. ஆனாத-குறையாத. சீர்-சிறப்பு. (1)

பண்டிதர் அ கந்தசாமிப்பிள்ளை.

குலாவி-விளையாடி. இயம்பியது-பேசியது. வந்தனை-வணக்கம். வாயுற-வாயார. (2)

ஈன்று-பெற்று. ஆடி-விளையாடி. கழறியது-பேசியதும். புனல்-நீர். புகன்றது-பேசியது. (3)

சி. சுப்பிரமணிய பாரதியார்.

பான்மை-இயல்பு. தே-தெய்வத்தன்மை. மதுரம்-இனிமை. பாமரராய், விலங்குகளாய் என்பன வாழ்ந்திடுதல் என்னும் சொல்லைக்கொண்டு முடிந்தன. (4)

கம்பர்-இராமாயணம் பாடியவர். வள்ளுவர்-வேதமாகிய திருக்குறளை இயற்றியவர். இளங்கோ-இளங்கோவடிகள். சிலப்பதிகாரத்தை இயற்றியவர். சேமம்-நன்மை. (5)

௩. நாட்டுப்பகுதி.

சி. சுப்பிரமணிய பாரதியார்.

தமிழ்கண்டதோர்வையை-தமிழின் இனிமையை அறிந்த ஒப்பற்ற வையை ஆறு. (1)

முத்தமிழ்- இயல் இசை நாடகம். மாமுனி - அகத்தியர். மொய்ம்பு-வலிமை. படைத்த-உடைய. (2)

மணம்-ஈண்டுப் புகழைக் குறித்து நின்றது. பார்-பூமி. (3)

வான்புகழ்-வானவர்புகழ், மிகுந்தபுகழ். அள்ளும்-தன்வச மாக்கிக்கொள்ளும். ஆரம்-மாலை. (4)

சிங்களம்-இலங்கை. புட்பகம்-மலேயா. சாவகம்-ஜாவா. (5)

சிதம்பரன்.

தத்துவம்-உண்மை. கலை-சாத்திரம். தாபதர்-தபசிகள். (6)

மன்னுவது-பொருந்தியிருப்பது. வானவர்-தேவர்கள். (7)

பங்கயத்தடம்-தாமரைத் தடாகங்கள். கங்கை-கங்கையினால். பரவுவது-வணங்கப்படுவது. (8)

கொடைக்காவலர்-வள்ளல்கள். (11)

அடியவர் - ஆழ்வார்கள் நாயன்மார்கள் முதலிய அடியார்கள். (12)

௨. நீதிப்பகுதி.

நன்னெறி.

மாசு-குற்றம். வன்சொல்-கடியசொல். ஏனையவர்- (குற்றம் உள்ளமனத்தை யுடைய) பிறர். பிறிது-கொடியது. நல்லோன்-சாக்கியநாயனர். சிலை-கல். கரும்புவில்லோன்-மன்மதன். கருப்பு-வலித்தல் விகாரம். வன்சொல் இன்சொல், எழுவாய்கள். இனிது. பிறிது, பயனிலைகள். (1)

அறும்-இல்லாத. இருவர்-இரண்டுநண்பர்கள். புணர்ந்தாலும்-சேர்ந்தாலும். நொய்து-அற்பம். புல்லினும் சேர்ந்தாலும். திண்மை-வலிமை. (2)

யாம் கல்வியால் கடலே அனையம் என மாற்றிப் பொருள் கொள்க. அடல்-(பிறரை) வருத்துகின்ற. ஏறு-ஆண்சிங்கம். ஆழ்த்திவிடல்-(உங்களை) அழுத்திவிடாதிருங்கள். முனிக்கரசு-அகத்திய முனிவர். பனி-குளிர்ச்சி. (3)

விழுமியோர்-பெரியோர். தீர்வுஉள்ளார்-நீக்குதலை நினையாத வராய். வெம்-கொடிய. தீர்க்கிற்பார்-நீக்குவார். கறை-கறுப்பு. திங் கள், நீக்கும் என்னும் வினைப்பயனிலை கொண்டு முடிந்தது. (4)

செல்வம்-செல்வத்தை யுடைய. மவ்வீறு ஒற்றழிந்து உயிரீற் றையொத்தது. தோற்றத்தோம்-பிறப்புடையோம். தலை-ஆயவர்-தலைமையான அறிவையுடையவர். கோதாய்-மாலையை அணிந்த மாதே. (5)

எந்தை இரப்பார்க்கு ஈந்து நல்கூர்ந்தான் என மாற்றிப் பொருள் கொள்க. நல்கூர்ந்தான்-தரித்திரமடைந்தான். மறுப்பரோ-விடுவரோ. அரம்பை-வாழை. மைந்தர் என்னும்பெயர் மறுப்பரோ வென்னும் வினைப்பயனிலைகொண்டது. (6)

ஆக்கும்-(எல்லாவற்றையும்) உண்டாக்கும். மீ-மேன்மை. அர வின்பருமணிகண்டு நீக்குபவர் ஆர், என மாற்றிப்பொருள்கொள்க. அரவு-பாம்பு. கடலின் கடு கவரார், என மாற்றுக. கடு-விஷம். (7)

இங்கு ஒருவருக்கு குணம் உண்டு எனினும், என மாற்றி யுரைக்கவும். கொண்டு-பொருளாக எடுத்துக்கொண்டு (பொருள்-விஷயம்) மலர்ச்சேக்கை-மலராலாகியபடுக்கையை. பொழில்-சோலை. வாய்-இடப்பொருள் உருபு. (8)

கொள்ளும்-(உயிரைக்) கொள்ளும். கொல்வான்-கொல்லும் பொருட்டு. குறுகுதல்-சேர்தல். கனிந்து-இரங்கி, நீ தோன்று எழுவாய். (9)

கேண்மை-நட்பு. அல்லார்-கெட்டவர்கள். ஆகாது-நன்று ஆகாது. தின் தீம்கனிஆம். தீம்-இனிமை. (10)

நீதிநெறிவிளக்கம்.

பயக்கும்-தரும். உறும்-வரக்கடவதாகிய. கவல்-கவலை. உற்றுழியும் - நேர்ந்தவிடத்தும். சிற்றுயிர்க்கு - அற்பவாழ்நாளை யுடைய உயிர்களுக்கு. உற்ற-பொருந்திய. பயக்கும். நாட்டும், கொடுக்கும் என்னும் வினைகளுக்கு எழுவாய் கல்வி. (1)

மெய்-உடல். விதிர்ப்பார்-நடுங்குவார். அவையஞ்சா கல்லார் என மாற்றிப் பொருள் கொள்ளுக. ஆகுலச்சொல்-ஆரவாரமான

பொருளற்ற சொற்கள். நவை-குற்றம். இன்நலம்-இளமை முதலிய இனியநன்மைகள். பூத்தல்-உண்டாதல். அஞ்சாத அஞ்சா என ஈறுகெட்டு நின்றது. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். (2)

மெலியாரை-ஏழைகளை. உடைமை-பொருள். அகம்-மனம். கருத்து-மனம். அழிக-வருந்துக. இவர்க்குஎற்று எனமாற்றி இவர்க்குமுன் எத்தன்மைத்து எனப்பொருள்உரைக்க. நீ தோன்ற எழுவாய். (3)

மாட்டி-நுழைத்து (அதாவது-வற்புறுத்திச் சொல்லுதல்) கையுறூஉம் (அவர் அவமதிப்பதனால்) வருந்துகின்ற. தம் உணரா-தம்முடைய தன்மையை அறியாத. ஏதிலரை-அயலாரை. எவன்-என்னகாரணம். (4)

நட்டல்-நண்புகொள்ளுதல். ஒற்று-தூதர்கள். தக்கார்-பெரியோர்கள். நெடுமொழி-உறுதிமொழிகள். கோறல்-அவமதித்துத் தள்ளுதல். குணம்பிறிது ஆதல்-நற்குணத்தினின்றும் மாறுபடுதல்.

மெய்-உடல். கண்துஞ்சார்-தூங்கமாட்டார். செவ்வி-காலம். அவமதிப்பு-அவமானம். கருமம்-காரியம். கண்ஆயினர்-குறிப்பாக உடையவர்கள். கண்ணாயினர் எழுவாய்; வினைப்பயனிலைகளைக் கொண்டது. (6)

ஆறு-வழி. ஒழுக்கின்தலை-ஒழுதலில். தலை, இடப்பொருள் உருபு. அல்லன-நன்மையல்லாதனவற்றை. ஒருப்படார்-உடன்படார். பொறி-புள்ளிகள். அற-மிகவும். பைங்கண்-பசுமையை உடைய இடம். பைங்கூழ்-பயிர். (7)

வள்ளன்மை - கொடுத்தல்தன்மை. நல்குரவு - தரித்திரம். கொன்னே-காரணமின்றி. அருள்-இரக்கம். கண்அறையன்-தாட்சண்யமில்லாதவன். (8)

நான்மணிக்கடிகை

ஒள்-ஒளிபொருந்திய. நல்ஆள்-நல்லசெயல்களையுடையஒருவன்.

கழிவு இரக்கம்-நீங்கியபொருளுக்காக வருந்துதல். ஒன்று உற்றூர்முன்-ஒருபொருளைப்பெற முயல்வார்மாட்டு. உறுமுதல்

கிடைக்காமைக்குக் காரணம். தெற்றெென-தெளிய. அல்ல-பாவமுடைய செயல்களை. எல்லாம்-எல்லா (நன்மைகளும்) (2)

இன்னுமை-துன்பம். இரவு எழுக-யாசித்தலைத் தொடங்குக. வேண்டின-விரும்பினுல். (3)

வானம்துளி-வானத்திலிருந்து வீழும் மழைத்துளியை. விளி-சாக்காடு. உலகம் இரண்டும் அதில் வாழும் உயிர்களுக்கு ஆகு பெயர். (4)

கரப்பவர்க்கு - வஞ்சகம்செய்வோர்க்கு. கவிழ்தல் - முகம் மவிழ்தல். தானை-சேனை. தறுகண்மை-அஞ்சாமை. ஊன் உண்டல் செய்யாமை உயிர்க்குச் செல்சார், எனமாற்றி. ஊன் உண்ணுதலைச்செய்யாமை தன்னுயிர்க்கு ஆதரவு ஆவதும் அல்லாமல் பிறவுயிர்களுக்கும் ஆதரவாகும், என்று பொருள் கூறுக. செல்சார்-ஆதரவு. (5)

இல்லை-(உணவு) இல்லை. அரசியல்-நல்ல அரசாட்சி. வழி-இடம். (6)

நல்லார்-(கல்வியறிவுடைய) நல்லோர். இவர்க்கு எவ்வூரும் உரிமையூராகும். நன்னெறிச்செல்வார், இவர் தவத்தினர், இவர் ஓர் ஊரிலும் பற்றுடையரல்லர். கடைகள்-கயவர்கள். இவர்க்கு எவ்வூரும் பயன்படாது. தம்கைத்து உடையார்-தம்கையிற் பொருள் உடையவர். (7)

திரிகடுகம்.

கணக்காயர் - உபாத்தியாயர். பிணக்கு - ஒருபொருள்பற்றி இருவர்மாட்டு உண்டாகும் வேறுபாடு. பாத்து-பகுத்து. (1)

தாழ்வு-அடக்கம். கொன்னே-வீணுக. கொள்ளும்-விரும்பும்.

விளைவின்கண்-விளைகின்ற காலத்தில். உள்ளனபோல-உள்ளனபோலத்தோன்றி. கெடும்-இல்லாமற்கெடும். (3)

நிறை-கிடைத்ததைக்கொண்டு திருப்தியடைகின்ற. நல்குரவு-தரித்திரம். அல்பொருள்-பாவம். மறவன்-கொலைத்தொழில் புரிவோன். திறவதில்-வேறுபாட்டில். தீர்ந்த-நீங்கிய. (4)

வள்ளன்மை-கேட்போருக்கு இல்லையென்னுமல் கொடுக்குந தன்மை. புணர்வின்கண்-பிறர் தன்னை ச சேர்ந்தவிடத்து. தக்கது-அவர்களுக்குச் செய்யத்தகுந்த காரியங்களை. பொத்து-பொந்து. காழ்த்த-வயிரம்பாய்ந்த. (5)

செய்க-தேடுதலைச் செய்க. பெருநூலைச் செய்க என மாற்றி, செய்க-கற்றலைச்செய்க எனப்பொருள் கூறுக. புரிந்து-விரும்பி. இருள் உலகம்-நரகம். ஆறு-வழிகள். (6)

பத்திமை-அன்பு. சான்ற-நிறைந்த. எயில்-மதில். அரண்-காவல். எண்ணில்-கணக்கில். உலவா-அகப்படாத. விழு-சிறந்த.

ஆசாரக்கோவை.

வைகறை-விடியற்காலம் துயில்-தூக்கம். ஒள்பொருளும்-ஒள்ளிய பொருளைத் தேடுதற்குரிய வழியையும் வாய் வது இல்-தவறுதலில்லாமல். கண்ட-துணிந்த சொல்லிய. (1)

குறளை-கோள் சொல்லுதல். வெளவல்-பிறர்பொருளைக் கவர்தல். அழுக்காறு-பிறர்பொருளைக் கண்டு பொறாமை கொள்ளுதல். ஐயந்தீர்-சந்தேகம் இல்லாத, அஃதாவது விளங்கிய. காட்சியார்-அறிவுடையவர்கள். நிரயம்-நரகம். உய்த்திடும்-செலுத திவிடும். செற்று-கெடுத்து. (2)

பாழ்மனை குடியில்லாத வீடு. தேவகுலன்-கோயில். பகல்வளரார்-பகலில் தூங்கமாட்டார். புகாஅர் என்பது செய்யுளில் தளை கெடாதிருத்தற்பொருட்டு அளபெடுத்தது. (3)

அளை-புற்று. முழை-குகை. சீயம்-சிங்கம். பயின்ற-பழகிய வை. இழுக்கம்-துன்பம். (4)

பழமொழி.

பிறிதுஉழி-வேறு இடத்தில். கிணற்று அகத்து-கிணற்றில் (வாழும்). கணக்கினை-ஒரு நூலினையே. முற்ற-முடியும்படி. பகலும்-நாள்தோறும். கேட்டலே-(பல நூல்களையும்) கேட்டலே.(1)

கழுமலம்-கழுமலம் என்னும் ஊர். யாத்த-கட்டிய. விழுமியோன்-சிறப்புடையவனாகிய கரிகாற் சோழன். உறற்பால-வரக்கடவன. (2)

இப்பாட்டிற் குறித்த கதை:—

கழுமலத்தை யாண்ட அரசன் ஒருவன் மக்கட்பேறு இன்றி இறந்தனன். அதுகண்ட அமைச்சர்கள் மனக்கவலைகொண்டு பட்டத்து யானையின் கண்களைக் கட்டி, இது யாரைத் தன் முதுகில் ஏற்றிக்கொண்டு வருகின்றதோ அவரையே அரசாகக்கொள்வதென முடிவு செய்து விடுத்தனர். அக்களிறு கருவூரையடைந்து ஆங்கிருந்த கரிகாற் சோழனைத் தன் முதுகில் ஏற்றிக்கொண்டு வந்தது. அவனையே அமைச்சர்கள் அரசனாகக்கொண்டனர். கழுமலம் என்பது சீகாழி என்று சிலரும், அஃது அன்றென்று சிலரும் கூறுகின்றனர்.

இலங்கைக்கிழவன்-இராவணன். கிழவன்-உரியன். இளையான்-விபீடணன். கெழீஇலார் பயன்பெறுதவர்கள். (3)

அல்லல்-துன்பம். நல்ல கிளைகள்-நெருங்கிய உறவினர். நல்ல வினைமரபின்-நல்ல செய்கையாகிய வழியினால். மற்று அதனை-அத்துன்பத்தை. அது-அத்தகைய செயல். இறுதியடியை, மனை மருந்து ஆயமரம், எனமாற்றி, மனையின்கண் நிற்கும் மருந்தாகிய மரத்திற்குச் சமமாகும் எனப் பொருள் உரைக்க. சேயல் எழுவாய், ஆதும் பயனிலை. (4)

முட்டு இன்றி-குறைவில்லாமல். அட்டிற்று-(சமையல் வீட்டில் இருந்துகொண்டு) அட்டிலிலுள்ளதனை. ஆயிரவர், ஈண்டு மிகுதி குறித்து நின்றது. அலர்தார் - பூமாலை. கலியூழிக்காலத்து - வறுமைக் குணம் அடைந்த காலத்தில். கலியுகமாகிய காலத்தில் என்றும் கூறலாம். (5)

குமரேச சதகம்.

வித்தை-கல்வி. சற்குரு-உபதேச குரு. அவம் அறுத்து-பயனில்லாத காரியங்களை ஒழித்து. கவளம்-சோறு. கலி-துன்பம். மவுலி-சடாமுடி. விமலர் - மலம் அற்றவர். புல் வயல்-புல்வயல் என்னும் தலம். நீடு-நிலைபெற்றிருக்கின்ற. மேவு-வீற்றிருக்கின்ற.

கதம்-கோபம். பொதி-மூட்டை. கான்புற்றும்-காட்டில்உள்ள புற்றும். இதம்-நன்மை. சவம்-பிணம். விளக்கும்-சுத்தம் செய்யும். மதம்-செருக்கு. (2)

தேய்வுடன்-குறைவடைதலோடு. சிறுமை-துன்பம். செரு-யுத்தம். வரிசை-சிறப்பு, அஃதாவது வெகுமதி. வசை செப்புவோர்-பழிச்சொற்களைக் கூறுவோர். (3)

தண்டலையார் சதகம்.

முக்கணர்-பரமசிவன். தண்டலைநாட்டில்-தண்டலை யென்னும் ஊரையுடைய நாட்டில். எரிகுளிர வைத்தாள்-நெருப்பைக் குளிரும்படிசெய்தாள். இவள் சீதை. வில்வேடனை எரித்தவள் தமயந்தி. மூவருக்கும் அமுதளித்தவள் அநசூயை. எழுபரி—எழுகின்ற பரியைப்பூட்டிய தேரையுடையவன். (சூரியன்) அவனைத் தடுத்தவள் நளாயினி. கொக்கெனவே நினைந்தனையோ கொங்கணவா என்றவள், திருவள்ளுவர் மனைவி வாசுகி. (1)

அல்அமரும்-கருமை நிறம் பொருந்திய. கல்லை-இலையால் தைத்த தொன்னை. கனிவு-அன்பு. ஒருதொண்டர்-ஒப்பற்ற தொண்டராகிய அரிவாட்டாயநாயனர். (2)

கரவடம்-கள்ளத்தனம். வாதிலே-விவாதத்தினல். (3)

மான் ஒன்று-மானைப்போன்ற. தேன்ஒன்று-தேனையொத்த இனிய. வான்ஒன்று-உயர்வுபொருந்திய. அரசிழந்தவன்-இராவணன். (4)

ரு. தனிப்பாடற் பகுதி.

காளமேகப்புலவர்.

தொட்டு-பிடித்து. வேதம் போம் வாயான்-வேதத்தைப் பயின்றுகொண்டிருக்கின்ற வாயை யுடையவனுகிய. குதிரை எழுவாய், போம் பயனிலை. ஓர் ஊரில் அரசாங்க வேலைக்காரனுகிய விகடராமன் எனனும் பிராமணன் ஒருவன இருந்தான். அவன் ஒருநாள் தன்னுடைய மெலிந்த குதிரையின்மிசை எறிச்சென்ருன். அது விரைவாக நடக்கவில்லை. அதனல் தன்னுடைய

வேலைக்காரர்களை விட்டு முன்னே மூவர் கடிவாளத்தைப் பிடித்து இழுக்கும்படியும் பின்னே இரண்டுபேர் தள்ளும்படியும் செய்தான். அதைக்கண்டு இப்புலவர் இப்பாடலைப் பாடினர். (1)

இப்பாடல் திருக்கன்னபுரத்தில் இருக்கும் திருமாலை நிந்தனையாகப் போற்றியது. கடவுள்-பரசிவன் அதிகம்-உயர்ந்தவன (2)

இது ஓர் இடைச்சி மிகுதியாகத் தண்ணீர் கலந்த மோரைக் கொடுக்க அதைப்பார்த்து இப்பாடலைப் பாடினர். ககனத்து உறும்போது-ஆகாயத்தில் இருக்கும்போது தார் ஒன்று-(பூ) மாலை பொருந்திய. (3)

இது சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் நடராசப்பெருமானை வணங்கும் பொழுது நிந்தையாகக் கூறிப் போற்றியது. வில்லால் அடித்தவன் அருச்சுனன். செருப்பால் உதைத்தவர் கண்ணப்பநாயனர். கல்லால் அடித்தவர் சாக்கியநாயனர். பிரம்பால் அடித்தவன் அரிமர்த்தன பாண்டியன். அல் ஆர்-கருமை நிறைந்த. பொழில்-சோலை. (4)

அவ்வையார்.

அவ்வையார் மாட்டு அன்புடையான் ஒருவன் இவரைத் தன்னில்லிற்கு அழைத்துச்சென்று உணவு கொள்ளும்படி வேண்டினன். இவரும் ஒருப்பட்டு உணவுகொள்ள உட்கார்ந்தார். அவ்வீட்டான் மனைவி உலோபக்குணம் உடையவள் ஆதலின் வெறுப்போடும் அன்பில்லாமல் சோறிட்டாள். அதைக்கண்டு உடனே இப்பாடலைப் பாடினர். மாண் ஒக்க-மாட்சிமைபொருந்த, அஃதாவது, தானகவே (1)

இதுவும் கீழ்வரும் பாடலும் முருகனை முன்னிலைப்படுத்திப் பாடியன. வேறுவிதமாகக்கதை கூறுவாருமுளர். வெவ்-கொடிய. ஆற்ற ஒணு-பொறுக்கமுடியாத- (2)

எகாந்தம்-தனி. (3)

இராமச் சந்திரக் கவிராயர்.

கமலப் பொகுட்டு—தாமரைமலர். தகப்பன் சாமி-தகப்பனுக்குக்குருவாயிருந்தவன்; முருகன். வயிற்றுச்சாமி--பிள்ளையார்.

வாணர்-கவிவாணர்கள். இது திருமயிலையிலிருந்த வேங்கடசாமி யென்னும் பிரபுவைப் புகழ்ந்து பாடியது. (1)

நாடாள்வாய்-அரசனே. மல்ஆரும்-மல்யுத்தத்தில் வலிமை பொருந்திய. (2)

வேதநாயகம் பிள்ளை.

பண்டி-வண்டி. தாக்கிடினும்-அடித்தாலும். (1)

கிரி-மலை. அனந்தன் ஆதிசேஷன். அரி-சிங்கம். மருங்கு என்பதைச் சொன்னால் என்பதனோடும் கூட்டி, அவனிடத்தில் சொன்னால் எனப் பொருள் கொள்ளுக. (2)

இரட்டைப்புலவர்.

தேங்கு-மிகுந்த- அல்ஆளிஅப்பா இருளைக் கழுத்தில் வைத்து ஆளுகின்ற அப்பனே. (1)

குறுகி-சேர்ந்து. கா-கற்பகச்சோலை கோ-காமதேனு. (2)

R. வேங்கடாசலம் பிள்ளை.

நோய்-முனிவர்களாக, சித்தர்களாக, யோகர்களாகச் செய்துவிடும் எனச் சொல்நயம் அமைத்தெழுப்பட்டுளது இப்பாட்டு முனிவர் பல விரதங்கள் மேற்கொள்ளலின் உடம்பு இளைத்திருப்பர். நோயாளியும் அங்ஙனம் ஆவன் எல்லாம் இத்துணைய எனும்-எல்லா என்புகளும் எண்ணிக் கணக்கிடுமாறு சித்தர்கள்-மக்கள் செல்லாத இடங்களிலும் சென்றுவரும் ஆற்றல் உடையர். பிணியாளர் மக்கள் நினைக்கத் தகாத பலவற்றிலும் எண்ணம் செலுத்துவர் யோகிகள் ஏனை மக்களாற் செய்தற்கரிய ஆதனம் அமைத்து நெடிதிருப்பர். பிணியாளர் நோய்நிலைக்கு ஏற்பக் குப்புற்றோ, மல்லாந்தோ ஒரே நிலையில் இருத்தற்குரியர் என்றவாறு. (1)

மோட்சம் வீடு எனப்படுவதன் காரணம் மக்களைப் பற்றியுள்ள மாயை விடுபடுவதேயாகும். பிணி-மாயையின் பற்று. வீடு-விடுபடல். இங்கே சொல்நயம் பிணிவீடே-பிணியுள்ளவீடே. பிணி இப்பிறப்பிலுள்ள அலுவல்களைத் தீர்த்துவிடும் மற்ற வருவாய்களையும் நீக்கிவிடும். வீட்டைவிட்டு அகலாதிருக்கச்செய்யும். இவை சொல்நயமாக பிறப்புக்களாகிய கடலை நீக்கும். இனிப்

பிறவாதிருக்கச்செய்யும். மோட்சத்தில் நிலைத்திருக்கச் செய்யும். என்று கொள்ளக்கிடத்தல் அறிந்து வியக்கத்தக்கது. (2)

௬. கதைப்பகுதி

தமயந்திமணம்.

பொன்னின்-பொன்னுலாகிய. மடப்பாவை-அழகியபதுமை போன்ற தமயந்தி. மின்நிறத்து-மின்னல்போன்ற நிறத்தினையுடைய. தாள்-பாதம். மண்டபத்தைத் தடாகமாகவும், இமை கொட்டாமற் பார்த்திருக்கும் அரசர் கண்களைத் தாமரையாகவும், அம்மண்டபத்திற்புகுந்த தமயந்தியை அன்னப் பறவையாகவும் கூறினர். 1

பரிசு என்று-தன்மையவென்று. இயல் அணங்கு-அழகால் தேவமகளைப்போன்ற ஒரு தோழி. தனி-ஒப்பற்ற கொடிக்கு-பூங்கொடிபோன்ற தமயந்திக்கு. தெரிந்து, காட்டினுல், என முடிக்க. (2)

ஈரிருவர் தேவர்-நான்கு தேவர்கள். இந்திரன், வருணன், அக்கினி, எமன் முதலியவர்கள். பூவரைந்த-பூவைக் கொண்ட. உளம் ஊசலாடுதலாவது:-மனத்தை ஒரு நிலையில் நிறுத்தாது பலவாறு எண்ணித் துன்புறுதல். (3)

காசினியில்-பூமியில். தோய்தல்-படிதல். வண்ணம்-அழகிய. நறும்-நல்ல. நன்னுதல்-இலக்குமி. தமயந்தி நளனை அறிந்தாள் எனமுடிக்க. (4)

வெள்கி - வெட்கமடைந்து. சுளிக்க-கோபங்கொள்ள. ஞாலம்-உலகில் உள்ளோர், ஆகுபெயர். வன்மாலை-வலியமயக்கத்தை. வயம் வேந்தை-வெற்றியையுடைய நளனை. பொன்-இலக்குமியை ஒத்ததமயந்தி. (5)

ஈங்கு வரவு என். வரவு-வருதல், தொழிற்பெயர். இமையவர்-தேவர். கோன்-அரசன். கோ என்பது னகரச்சாரியைபெற்று நின்றது. கலி-சனிக்கடவுள். இருப்பான்- (மணமகனுய்) இருக்கும் பொருட்டு. (6)

வெறி-வாசனை. மடமாதின்-அறிவில்லாத அத்தமயந்தியின். கேள்வன்-கணவன்-கீழ்மை-தாழ்வு. கொதித்து-கோபித்து. (7)

வாய்மை-உண்மை. வளம்-செழுமை. தூய்மை-குற்றமில்லாத இயல்பு. பூமான்-தாமரை மலரில் வாழும் மான்போன்ற பார்வையையுடைய இலக்குமியை ஒத்த தமயந்தி. கொற்றம்-வெற்றி. வச்சிரத்தான்-வச்சிரப்படையையுடைய இந்திரன். (8)

மங்கல நாள்-கலியாண நாளை. காண-பார்க்க. குமுதம்-அல்லிமலர். வாயடங்க-குவியுமாறு. தீ-ஆவலாகிய தீ. கதிரோன், எறிஞன், என முடிக்க. (9)

கணி-சோதிடன். கடி-சிறப்பு. அணிமொழிக்கும்-அழகிய மொழியினையுடைய தமயந்திக்கும் பணிமொழியார்-பணிவான மொழிகளையுடைய தோழியர். தவிசு-ஆசனம். (10)

மகிழ்தூங்க-மகிழ்ச்சிபரவ. துய்ய-குற்றமற்ற. புணர்ந்தார்-ஒற்றுமையுடன் வாழ்ந்தார். (11)

நளாயினி மணம்.

அயில் வேல்-கூர்மை பொருந்திய வேலாயுதத்தை. கரம்-கையின்கண் உடைய. பண்பு-குணம். (1)

தன்னை இணை ஒவ்வா-தனக்குத் தானே ஒப்பன்றிப் பிறர் ஒப்பில்லாத. தார்-மாலை. நாமம்-பெயர். (2)

கன்னல்-சருக்கரைப் பாகுபோன்ற. இந்திரை-தேவேந்திரன் மனைவியாகிய இந்திராணி. வாணி-சரசுவதி. ஏர்-அழகால்உயர்ந்த. திரு-லக்குமி. (3)

ஏற்ற-பொருந்திய. குணம்-நற்குணம். (4)

கொண்கனு-கணவனுக. அமரும்-பொருந்தும். (5)

முத்தம் நகை-முத்துப்போன்ற பற்கள். அதரம்-இதழ். மொய்-அடர்ந்த. நல்அறமே-நல்ல அறச்செய்கையிலேயே. உற்று-பொருந்தி. ஒன்றினன்-இருந்தான். நல்அறமே உற்று ஒன்றினன் என மாற்றிப் பொருள் கூறுக. (6)

ஓங்கு இடம் - உயர்ந்த ஆசனம். உவந்து - மகிழ்ச்சியுடன். சுருதி-வேதம். (7)

செம்மையுடன்-நன்றாக. (8)

பேரூர்-பெருமை நிறைந்த. ஈடேறும்-நிறைவேறும். (9)

அணங்கு-தெய்வப் பெண்ணை ஒத்த நாளாயினி. வாய், இடப் பொருளுருபு. நோன்பு-விரதம். மலி-நிறைந்த. (10)

ஆழி-மோதிரம். பொற்பு-அழகு. மாதர் மனம் மன்னிடுவார் என மாற்றிப் பெண்கள் மனத்திற்கு இசைந்தவராவர் எனப் பொருள் கூறுக. (11)

காதலோடு-அன்போடு. போந்த-வந்திருந்த. கண்ட-முன்னர்க்காணப்பட்ட. வாளையுடைய-வாளாயுதத்தையுடைய. (12)

ஒவ்வார்-பகைவர். ஆழி-ஆழியை. முடி-மணம்முடித்துவை.()

மன்றல்-கல்யாணம். மகிழ்மன்ன-எனமாற்றி, மகிழ்ச்சிபொருந்த எனப் பொருள் உரைக்க. வேந்து-நளன். (14)

பஞ்சதந்திரம்.

திரைகெழு-அலைகள் நிறைந்த. கங்கா தீரம்-கங்கைக்கரை. பைத்த-பசுமையான. மருவும்நாள்-வசிக்கும் நாட்களில் ஒருநாள். பார்ப்பு-பறவைக்குஞ்சுகள். பால்பகா வஃறிணைப் பெயர். (1)

உய்வதுஎண்ணி-பிழைக்கும் வழியை நினைந்து. விதிர்ப்பொடு-நடுக்கத்தோடு. என-என்று கழுகு கேட்க. (2)

ஓடிலையேல்-ஓடாது நிற்பாயாயின். சினவுகினும்-கோபித்தாலும். (3)

பேதம் ஆம் சாதியினால்-சாதிபேதத்தினால். ஆசாரம்-ஒழுக்கம். (4)

ஆக்கம்மிகும்-(நற்குணமாகிய) செல்வம் நிறைந்த. உற்றபடி-அடைந்த காரணத்தை. நவல்-சொல். (5)

இயல்-தன்மை. புலவர்-அறிவுடையோர். எய்தி-அடைந்து. அறம்-தருமங்களை. பொங்குற்ற-(நன்மை) மிகுந்த. மரபு-வழி. (6)

இல்லறத்தின்-இல்லற தருமத்தில் பொருந்தியிருந்து. திறம்-அதற்குரிய செயல்களை. அடுத்தோர்-மேற்கொண்டிருப்பவர்களிலும். நடைநின்போல் என்பதை நின்போல் நடை என மாற்றி உன்னை யொத்த ஒழுக்கமுடையவர்களை எனப்பொருள் உரைக்க. தெவ்வர்-பகைவர். (7)

அருந்தி-உண்டு. உழல்வது-திரிவது. முன் குறித்தது-முதலில் நினைத்துக் கொள்ளத்துணிந்தது. அவண்-அவ்விடத்தில். (8)

தீக்கருமம்-கெட்டசெயல்கள். பாதகம்-பாவம். பலாதிகள், பலம் ஆதிகள்-பழம் முதலியவைகள். (9)

கடும கழுகு-கோபத்தோடிருந்த அக்கழுகு. அதன்வீடு-அக்கழுகின் வீட்டிலேயே. மடம்படு-இளமைபொருந்திய. பறழ்-பறவைக்குஞ்சுகள். (10)

இது-இக்கழுகே. அதை-அக்கழுகை. உள்ளகுணம்-இயற்கைக குணம். (11)

திருவிளையாடல்.

கன்னியர்க்கு அரசு ஆயினுள்-தடாதகைப் பிராட்டியார். கடி, மனைபுகுந்த-திருமணத்திற்காகத் தனது அரண்மனைக்குவந்த. இயல்-தன்மையமைந்த. இயல்-செய்யப்பட்ட. போனகம்-உணவு அருத்தா-அருத்தி. பிறவினை; செய்யா என்னும் வினையெச்சம். (1)

பழுக்காய்-பாக்கு. வாசம் வாசனைப் பொருள்கள். மெல்லிலை-வெற்றிலை. வழங்கா-கொடுத்து. செய்யா என்னும் வினையெச்சம். செல்லுநர்-போகவிரும்பியவர்களை. ஈசன் அன்புறு கற்பினுள்-சோமசுந்தரக்கடவுளாகிய சவுந்தர பாண்டியரால் விரும்பப்பட்ட கற்பினையுடைய் தடாதகைப் பிராட்டியார் வேலை-சமயம். (2)

புலவர்-அறிவில் வல்லவர். ஆயிரத்து ஒருபங்கு இடையது ஆயினும்-ஆயிரத்தில் ஒருபங்கில் பாதியாயினும். மேல்-இனி கணவர்முன்-கணவராகிய சவுந்தர பாண்டியர் முன். குறுகா-சென்று. செய்யா என்னும் வினையெச்சம். (3)

இறை எம்பிரான்-கடவுளாகிய எமது சவுந்தர பாண்டியர். ஒன்றும்-பொருந்தியிருக்கும். குடை-குடையைச்சுமக்கும். பாரிடம்-பூதம். தலைவன்-குண்டோதரன் (4)

நகை-மகிழ்ச்சி. முதனிலைத் தொழிற் பெயர். மறு இல்-குற்றம் இல்லாத. மீனவன்-மலையத்துவச பாண்டியன். மகள்-மகளே என்னும் விளி இயல்பாய் நின்றது. "வான் தருவும் நின்பணி செயப் பெற்று இங்கு உறைவதேல் உனக்கு அரிதில் பெறுவது எது" என மாற்றிப் பொருள் கொள்க. திரு-செல்வங்கள். (5)

விளைவு செய்தனை - சாட்டினாய். தளவம் மூரலாய்-முல்லையரும்பை யொத்த பல்வரிசைகளை யுடையவளே. (6)

அடுக்க-பக்கத்தில். அகட்டு இடை-வயிற்றின் கண். மடுக்க-வந்துபுகும்படி. உன்னினான்-நினைத்தான். தொடுக்க-வளர. ஆலம்-நஞ்சு (விஷம்) ஆங்கு, உவம உருபு. உயங்கினேன்-வருந்தினேன். (7)

குறள்-பூதம். சோறும்-சொல்லுவாம். புலர்ந்திட-காய. தளர்ந்து, புகைந்து, என்னும் சினை வினையெச்சங்கள், நடந்தான் என்னும் முதல் வினையோடு முடிந்தன. (8)

படைக்கண் ஏவலர்-வாள்போன்ற கண்களையுடைய ஏவல் செய்யும் பெண்கள். தொடுத்தவன்-கட்டப்பட்டவன். சொன்றி முன்-சோற்றின் முன்னர். அடுத்து நின்றதே கண்டனர்-(அப்பூதம் சோற்று மலையின்) பககத்தில் நின்றதை மட்டும் பார்த்தனர். அயின்றதும்-உண்டதும். அடிசில்-சோறு. (9)

அலங்கல் ஓதி-மாலையை யணிந்த கூந்தலையுடைய பிராட்டியார். அன்பின் நலம் கொள்-அன்பால் ஆவல் கொண்ட. இலங்கு-விளங்குகின்ற. சுவல்-பிடர். ஒல்கி-துவண்டு. கிளைத்து-கிளறி. நிருபன்-சவுந்தரபாண்டியன். (10)

அம்சில் ஓதியை-அழகிய வட்டத்தகட்டை யணிந்த கூந்தலை யுடைய பிராட்டியாரை. "ஆர் அழல் குஞ்சி" என மாற்றுக. குஞ்சி-ஆண்மயிர். குடவயிற்றவன்-குண்டோதரன். நிமலை-தடாதகைப் பிராட்டியார். (11)

செய்ய-சிவந்த. தேற்றம்-நிச்சயம். (12)

அட்ட-சமைத்த. பனிவரை-இமயமலை. காந்துவது-எரிகின்றது. (13)

கையர்-ஒழுக்கமில்லாதவர்களது. முப்புரத்தில்-திரிபுரத்தில். கையெறிந்திடும்-கைகொட்டும். அண்டங்கள்-உலகங்கள். உயிர்த்திடும்-பெருமூச்சு விடும். ஆவிசோர்ந்து அயரும்-உயிர் சோர்ந்து வருந்தும். (14)

செந்தமிழ்ச் செய்யுள் மாலையின் குறிப்புரை,

நிறைவேறியது.